பக்கங்கள் நான்கு — விலை ரூபா:- 4-50

# முரசொலி

முரசு 05 ஒலி 99 பிரமோதூத மாசி 22 (06-03-1991) புதன்

★ யாழ் பல்கலைக் கழகத்துக்கு

## 1990-91 கல்வியாண்டில் அதிக மாணவருக்கு அனுமதி

1990 - 1991-ம் கல்வி யாண்டில் இம்முறை கூடுத லான மாணவர்கள் யாழ் பல்கலைக்கழக கற்கை நெறியைப் பெறும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக பல் கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன. இது குறித்த இறுதி முடிவு பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு வினால் தீர்மானிக்கப்பட் டுள்ளது இதன் படி 1989-ம் ஆண்டு க. பொ. த. உயர் தரப்பரீட்சையில் சித்தி யடைந்த மாணவர்களுக்கு அண்மையில் வெளியான வெட்டுப்புள்ளி (cut - out)

— 04 ஆம் பக்கம் பார்க்க

# புலிகளே தமிழரின் பிரதிநிதிகள்

# இந்தியா ஏற்றுக் கொள்கிறது

## புதிய வெளியுறவு செயலர் முஜ்குந்டுபே கருத்து

"இலங்கைத் தமிழ் மக்களில் பெரும்பான்மையினரின் ஆதரவு பெற்ற தனியொரு அமைப்பாக விடுதலைப்புலிகள் விளங்குகின்றனர் என்பதை இந்தியாவும் ஏற்றுக்கொள்கிறது" இவ்வாறு இந்திய வெளி யுறவு அமைச்சின் செயலர் முஜ்குந்டுபே தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் இந்திய - இலங்கை வெளியுறவு அதி காரிகளின் மாநாட்டில் கலந்து கொண்டபோதே அவர் இக்கருத்தை வெளியிட்டார்.

இலங்கைத் தமிழரின் போராட்டத்திற்கு சமாதான முறையில் முடிவுகாண வேண் டுமாயின், ஸ்ரீலங்கா அரசு தமிழ்மக்களுக்கு அதிகப்படி யான தன்னாட்சி உரிமையை வழங்க முன்வரவேண்டும் என வும் இந்தியா வலியுறுத்துவ தாக முஜ்குந்டுபே குறிப்பிட்ட தாகவும் ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

சில வாரங்களுக்கு முன்பு பத்திரிகைகளுக்குப் பேட்டி அளித்த இலங்கையில் உள்ள இந்தியத்தூதுவர் எல். என். ஜா "தமிழ் மக்களுக்கு அதிக அதிகாரங்களை வழங்கு வதற்கு ஸ்ரீலங்கா அரசு சில காத்திரமான நடவடிக்கை களை எடுக்கவேண்டும் அதன் மூலமே சிறுபான்மையினம் கொண்டுள்ள ஐயுறவுகள் நீங்கி நம்பிக்கை பிறக்க ஏது வாகும்" என்று தெரிவித்த தும் குறிப்பிடத்தக்கது.

## அமைச்சர் ரஞ்சனின் பூதவுடலுக்கு ஜனாதிபதி, வாசுதேவ அஞ்சலி

அமைச்சர் ரஞ்சன் கொல்லப்படக் காரணமாக இருந்த வெடிகுண்டுச் சம்ப வம் தொடர்பாக தகவல் களை தருபவர்களுக்கு பத்து லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் என பொலிஸ் மாஅதிபர் அறிவித்துள்ளார்.

இதனிடையே நேற்று ஹோட்டன் பிளேஸ் இல்லத் தில் வைக்கப்பட்டுள்ள அமைச்சரின் பூதவுடலுக்கு ஜனாதிபதி பிரேமதாஸ நவ சமசமாஜக்கட்சித் தலைவர் வாசுதேவ நாணயக்கார மற் றும் இரு சுதந்திரக்கட்சி எம். பிகள் ஆகியோர் சென்று தமது அஞ்சலியை செலுத்தி னர்.

அமைச்சர் ரஞ்சனின் மரு மகன் உட்பட அவரது உற வினர்கள் நேற்று அமெரிக்கா வில் இருந்து கொழும்பு வந்து சேர்ந்தனர்.

## கொழும்பு குண்டு வெடிப்பால் 500 தமிழ் இளைஞர் கைது

கடந்த சனிக்கிழமை கொழும்பில் இடம் பெற்ற கார்க்குண்டு வெடிப்பை யடுத்து 400க்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் பொலி ஸாரால் தாக்கப்பட்டு, கைகள் கட்டப்பட்ட நிலையில் கொழும்பிலுள்ள சிறைச் சாலைகளுக்கு கொண்டு செல் லப்பட்டதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்.

வெளிநாடு செல்வதற்காகக் கொழும்பில் தங்கியுள்ள அனேகமானோரே இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களா வர்.

கைது செய்யப்பட்டவர் களில் இளம் பெண்களும்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## ராஜீவை உளவு பார்த்தவர்கள் பீஹார் பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள்

## பொதுமக்கள் மீது குண்டு வீச்சு செஞ்சிலுவை தலைமைக்கு செய்தி

நேற்றும், நேற்று முன்தின மும் யாழ் மாவட்டத்தில்

செஞ்சிலுவைச் சங்க யாழ் பிரிவு கொழும்புத் தலைமை

## மடு அகதிகளுக்கு உதவிகள்

மடுமாதா தேவாலயப்பகுதி யில் வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருமலை

— 4 ஆம் பக்கம் பார்க்க

## ஒட்டுமடம் சந்தியில் வயோதிப மாது மரணம்

நேற்று யாழ் ஒட்டுமடச் சந்திப் பகுதியில் திடீரென வந்த 'பொம்மர்' ஒன்று குண்டு ஒன்றை வீசியது.

இதனால் மா. சின்னம்மா (70) ஸ்தலத்திலே கொல்லப் பட்டார், ம. தாயேஸ்வரி (47) ம. ஆனந்தராணி (17) ம மனோகரன் (13), கெங்கா லெட்சுமி (37) என்போர் படுகாயம் அடைந்தனர்.

— 4 ஆம் பக்கம் பார்க்க

## நல்லூரில் குண்டு வீச்சு மூதாட்டி உடல் சிதறிப்பலி

நேற்றுக் காலை 9 மணியள வில் இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் நல்லூர் பகுதி யில் மேற்கொண்ட தாக்கு தலில் கந்தையா இராசம்மா (70) என்ற மூதாட்டி ஒருவர் ஸ்தலத்தில் உடல் சிதறிப்பலி யானார்.

முதலாவது குண்டுச் சத் தத்தைக் கேட்டு வீதிக்குவரும் போது அடுத்த குண்டு அவர் அருகில் விழுந்ததில் இம் மூதாட்டியின் உடல் சிதறி யது. (ப 11)

## கரவெட்டியிலும் பொம்மர் தாக்கு பல வீடுகள் சேதம்

கரவெட்டி விக்னேஸ் வராக் கல்லூரி வீதியில் உள்ள மூன்று வீடுகள் மீது இரு பொம்மர் விமானங்கள் நேற்றுக் குண்டு வீச்சுத் தாக் குதல்களை மேற்கொண்டன.

இங்கு மூன்று குண்டுகள் வீசப்பட்ட போதிலும் இரண் டாவதாக வீசப்பட்ட குண்டு வெடிக்கவில்லை.

இதனால் திருமதி பொன் னம்மா (ஆசிரியை), இராசக் கோன் ஆகியோர்களின் வீடு களும், இவற்றிற்கு கிழக்குப் புறமாக ஒழுங்கை ஒன்றில் உள்ள மற்றொரு வீடும் பலத்த சேதத்திற்குள்ளாகின.

இவ் வீடுகளில் இருந்தோர் பதுங்கு குழிக்குள் பாது காப்புத் தேடியமையால் உயிர் தப்பினார்கள். இச்

—04 ஆம் பக்கம் பார்க்க

## கலட்டிச்சந்தியில் குண்டு வீச்சு வயோதிபர் தலை சிதறியது

கலட்டிச்சந்தியில் நேற்று பகல் 2 மணிக்கு மேற் கொண்ட பொம்மர்த்தாக்கு தலில் நாலு பிள்ளைகளின் தந்தையான நாகமுத்து தம்பி ராசா (70) தலை சிதறுண்டு உயிரிழந்தார்.

இத்தாக்குதலில் செ. இரா யப்பு (38), மா. விஜயரத்தினம் (46) ஆகியோர் கடையில் நின்றவேளை படுகாய மடைந்து யாழ் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். ரவிராசா கம் பலத்த சேதமடைந்துள் ளது. (ப 11)

## கிளிநொச்சியில் குண்டு வீச்சு பெண் பலி; 6பேர் காயம்

கிளிநொச்சி முரசுமோட் டைப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் நான்கு மணியள வில் இரண்டு பொம்மர்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தின.

இதில் சதாசிவம் தங்கம்மா (58) முரசுமோட்டை என்ற வயோதிப மாது கொல்லப் பட்டார்.

வே. சதாசிவம் (60) தர்ம லிங்கம் கமலராணி (21), ஏ. விஜயலட்சுமி (44) நா.

—04 ஆம் பக்கம் பார்க்க

## ஊர்காவற்றுறையில் கடும்மோதல் சின்ன மூளாய் நோக்கி ஷெல்

நேற்றுக் காலை ஊர்காவற்

வெளியேற முயன்றபோது

## ராஜீவை உளவு பார்த்தவர்கள் பீஹார் பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள்

இந்திரா காங்கிரஸ் தலைவர் ராஜீவ் காந்தியை இரு உளவு அதிகாரிகள் உளவு பார்த்த விடயம் நேற்றும் இந்திய பாராளுமன்றத்தில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் இதை ஆட்சேபித்து மூன்று முறை பாராளுமன்றத்திலிருந்து வெளிநடப்புச் செய்தனர். பாராளுமன்ற ஆசனங்கள் பெரும்பாலானவை வெறிச்சோடின இதனால் மூன்று முறை பாராளுமன்றம் ஒத்திவைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

— 4 ஆம் பக்கம் பார்க்க

## செஞ்சிலுவை தலைமைக்கு செய்தி

நேற்றும், நேற்று முன்தினமும் யாழ் மாவட்டத்தில் ஸ்ரீலங்கா விமானப்படையால் மேற்கொள்ளப்பட்ட குண்டு வீச்சுத் தாக்குதலில் அதிக மக்கள் கொல்லப்பட்டது தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ் பிரிவு கொழும்புத் தலைமையகத்திற்கு அறிவித்துள்ளதாக செஞ்சிலுவைச் சங்க

— 4 ஆம் பக்கம் பார்க்க

## மாத்தறை வயலில் புதைக்கப்பட்ட எட்டுத் துப்பாக்கிகள் மீட்பு

மாத்தறை மாவட்டத்தில் உள்ள ஹுங்கம என்ற இடத்தில் வயலில் புதைத்து வைக்கப்பட்டிருந்த எட்டுத் துப்பாக்கிகளை பொலிஸார் கண்டு பிடித்தனர்.

ஜே. வி. பி. இயக்கத்தினர் 1987 இல் இங்கு நடமாடிய போது இவற்றைப் புதைத்து வைத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

## சின்ன மூளாய் நோக்கி ஷெல்

நேற்றுக் காலை ஊர்காவற்றுறையில் உள்ள சின்ன மூளாய், சுருவில், கரம்பன் பகுதி காவலரண்களில் இருந்து இராணுவத்தினர் வெளியேற முயன்றபோது அவர்களை எதிர்த்து புலிகள் கடும் தாக்குதல் நடாத்தினர்.

காலை 10.30 மணிக்கு வெளியேறிய இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நண்பகல் ஒரு மணி வரை மோதல் நடைபெற்றது. இதன் பின்னர் இராணுவத்தினர் பின்வாங்கி தமது காவலரண்களுக்கு

—04 ஆம் பக்கம் பார்க்க

## தமிழ்மக்களுக்கு எதிரானபோர் மூன்று கட்சிகள் கூட்டறிக்கை

லங்கா சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட்கட்சி, வெகுஜன சுதந்திர முன்னணி ஆகிய மூன்று கட்சிகளும் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் வடக்கு கிழக்கு மக்களின் அவல நிலை குறித்து கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. ''இனப்பிரச்சினைக்கு நாம் அரசியல் தீர்வையே வலியுறுத்தி வந்துள்ளோம். வடக்கு கிழக்கு பகுதிகளில் இடம்பெறும்

... 04 ஆம் பக்கம் பார்க்க

## மன்னாரில் குண்டு வீச்சு

மன்னார் தீவுப் பகுதியில் நேற்றும், நேற்று முன்தினமும் ஸ்ரீலங்கா விமானப் படையைச் சேர்ந்த பொம்மர் விமானங்கள் கடுமையான

—04 ஆம் பக்கம் பார்க்க

### தமிழர் கட்சிகளில் சந்தேகமாம்

# சர்வகட்சி மாநாட்டில் இருந்து முஸ்லிம் ஐக்கிய முன்னணி விலகல்

சர்வகட்சி மாநாடு ஏற்பாடு செய்த தமிழர், முஸ்லிம் கட்சிகளின் பேச்சுவார்த்தையில் இருந்து முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி விலகிக்கொண்டுள்ளது.

இது குறித்து அதன் செயலாளர் பத்திரிகைகளுக்கு அறிக்கை ஒன்றையும் விடுத்துள்ளார்.

அதிகாரப் பகிர்வில் முஸ்லிம்களுக்கு ஒரு தனி அமைப்பு, சிறுபான்மையினருக்கு 90க்கு 50 என்ற ரீதியில் நின்ற தமிழ்க் காங்கிரஸ் அதன் நிலையை இன்று மாற்றியுள்ளது.

தமிழ் அரசுக்கட்சி இன்றைய அரசியல் அமைப்பை மாற்றி சமஷ்டி அரசியல் அமைப்புமுறை வேண்டும் என்று கூறுகிறது. வடக்கு கிழக்கு மாநிலப்பிரச்சினைத்

— 4 ஆம் பக்கம் பார்க்க

### பல. நோ. கூ. சங்கங்கள்

# நிவாரணக்கணக்குகளை சீராக்கினால் விநியோகவேலைகளும் சீராக நடைபெறும்

யாழ் மாவட்டத்தில் உள்ள சகல பல. நோ. கூ. சங்கங்கள் தமது கைவிருப்பில் உள்ள பொருள்களின் இருப்பு விநியோகம் சம்பந்தப்பட்ட அறிக்கைகளை அவ்வவ் விநியோக முடிவின் போதும் செயலகத்துக்கு அறிவிக்க வேண்டும் என செயற்திட்டப் பணிப்பாளர் இ. பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

சில பல. நோ. கூ. சங்கங்கள் சீராக விநியோக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும், ஒரு சில சங்கங்கள் இது பற்றிய கணக்குகளை சரியாக வைத்திராமலும் செயலகத்துக்கு அறிவிக்காமலும் உள்ளதாக அவர் மேலும் சொன்னார்.

— 4 ஆம் பக்கம் பார்க்க

## உணவுமுத்திரை 6,7,8,9 ஆம் புள்ளிகளுக்கு உணவுப்பொருள் வழங்க நடவடிக்கை

யாழ் குடாநாட்டில் கடந்த ஆண்டில் காலாவதியான வறுமை ஒழிப்புத் திட்டத்தின் கீழான உணவுமுத்திரைகளின் 6 ஆம், 7 ஆம், 8 ஆம், 9 ஆம் புள்ளிகளுக்கான உணவுக் கொடுப்பனவுகளை இவ்வாண்டில் வழங்க வறுமை நிவாரண ஆணையாளர் இணக்கம் தெரிவித்துள்ளதாகத் தெரியவருகிறது.

யாழ் மாவட்டத்தில் இதற்கான உணவை பல நோ.கூ. சங்கங்களுக்கு விநியோகம் செய்ய யாழ் அரச உணவுக் களஞ்சியத்தில் பொருள்கள் இல்லாமையாலும், உள்ளூரில் பொருள்களை வாங்கக் கூட்டுறவுச் சங்கங்களில் பணம் இன்மையாலும், போக்குவரத்துச் சிரமேட்டினாலும் இந்த நான்கு புள்ளிகளுக்குமான உணவுப் பொருளை விநியோகம்செய்ய முடியாதிருந்தது.

இவ் விநியோகத்திற்கு சுமார் 8 கோடி ரூபாவுக்கு மேல் தேவைவெனவும், கூட்டுறவுச் சங்கங்கள் தாம் இதற்காக விநியோகித்த பொருள்களின் பெறுமதிக்கான வவுச்சர்களை யாழ் செயலகத்திற்கு அனுப்பும் பட்சத்தில் அடுத்த விநியோகத்தைச் செய்ய முற்பணம் வழங்க முடியும் எனவும் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (66)

## கைதான 25 பேர் அதிரடிப் படை முகாமில்

அக்கரைப்பற்றில் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்ட 25 பேர் கல்முனை அதிரடிப்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் 25 பேரும் கொழும்பு மகஸின் சிறைச்சாலைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## அரச ஊழியர் அனைவருக்கும் கட்டாய காப்புறுதித்திட்டம் அமுல்

சகல அரச உத்தியோகத்தர்களும் மருத்துவ காப்புறுதித் திட்டத்தின்கீழ் கட்டாயமாக சேர்த்துக் கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான சுற்றுநிருபம் சகல திணைக்களங்களுக்கும், கூட்டுத்தாபனங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

எதிர் காலத்தில் மேற்படி திட்டத்தின்கீழ் ஒரு உத்தியோகத்தரைக் கட்டாயமாக கொண்டுவராது அவரவர் விருப்பத்திற்கேற்ப சேர்த்துக்கொள்ளும் வாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் ஏற்கனவே சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் விரும்பின் இதில் இருந்து விலகிக் கொள்ளலாம். அவர்கள் விலகும் திகதிவரை இத் திட்டத்தின் கீழுள்ள பயன்களைப் பெறலாமேயொழிய செலுத்திய தவணைப் பணத்தை மீளப் பெறமுடியாது.

## முஸ்லிம் ஊர்காவலர் அச்சுறுத்தலால் கல்முனையில்தமிழ்ப்பாடசாலைகள்பாதிப்பு!

தென்தமிழீழம் கல்முனையில் தமிழ்ப் பாடசாலைகளுக்கு மாணவர் வரவு மிகக் குறைவாகவே உள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கல்முனையில் பிரபல தமிழ்ப் பாடசாலைகளான கல்முனை பற்றிமா கார்மேல் கல்லூரியும், உவெஸ்லி கல்லூரியும் காலை 7.30 மணி முதல் 10.30 மணி வரையான மூன்று மணி நேரம் மட்டுமே இயங்கி வருகின்றன.

இராணுவ நடவடிக்கை, முஸ்லிம் ஊர்காவல் படையினரின் அச்சுறுத்தல் என்பன காரணமாகவே பாடசாலைகளுக்குச் செல்வதற்குத் தமிழ் மாணவர்கள் தயக்கம் காட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ப-6)

## மட்டு. தமிழ் அரச அதிபரின் அதிகாரங்கள் பறிப்பு!

## திருமலை சிங்கள அதிபருக்கு அதிக அதிகாரங்கள்!!

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வெற்றிடங்களுக்கு நேர்முகப் பரீட்சைகளை நடாத்தி நியமனங்களை வழங்கும் அதிகாரம் அரச அதிபரிடம் இருந்து பறிக்கப்பட்டுள்ளதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

வெற்றிடங்களுக்கு தமிழர்கள் நியமிக்கப்படுவதை தடுக்கும் நோக்குடனேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாம்.

ஆனால் திருகோணமலையில் உள்ள வெற்றிடங்களுக்கு நேர்முகப் பரீட்சையை நடாத்தி நியமனங்களை வழங்கும் அதிகாரம் அங்குள்ள பெரும்பான்மை சமூக அரச அதிபருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த பாரபட்ச நடவடிக்கை குறித்து மட்டு அரச அதிபர் திரு.தருமலிங்கம் அப் பகுதிக்கு விஜயம் செய்த எதிர்க்கட்சிப் பிரதிநிதிகளிடம் எடுத்துக் கூறியதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (38)

## மீன்பிடிஉபகரணம் அபகரிப்பு

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த புதன்கிழமை மூதூரில் உள்ள மீனவரின் 60 ஆயிரம் ரூபா பெறுமதியான வலைகளையும், உபகரணங்களையும் முஸ்லிம் ஊர்காவல் படையினரும் இராணுவத்தினரும் அபகரித்துச் சென்றுள்ளனர். (17)

## பல்கலைக்கழகத்தில் கலந்துரையாடல்

'இன்றைய சூழ்நிலைகளால் சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள உளத் தாக்கங்களும் அவற்றுக்கான தீர்வுகளும்' என்ற தொடரில் மற்றொரு கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை பிற்பகல் யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் என பல்கலைக்கழகத் 'தமிழ் மன்றம்' அறிவித்துள்ளது.

## பாடசாலை முன்னேற்றம் அதிபரில் தான் தங்கியுள்ளது - பூரணம்பிள்ளை

'பாடசாலைகள் ஒழுங்காக நடத்தப்பட்டால் மாணவர்கள் ஒழுங்காக வளர்வார்கள், நல்லவர்களாய்ப் போவார்கள், நன்றாக வருவார்கள். தோற்றத்தில் அல்ல; சிந்தனையில், ஆற்றலில், பாடசாலைகளின் முன்னேற்றம், மாணவர்கல்வி அதிபரில் தான் தங்கியுள்ளது.' இவ்வாறு ஹாட்லி, பரியோவான் கல்லூரிகளின் முன்னாள் அதிபர் க. பூரணம்பிள்ளை அமரர் பி. எஸ். குமாரசுவாமியின் நினைவுப் பேருரையை நிகழ்த்தும்போது குறிப்பிட்டார்.

அகில இலங்கைக் கம்பன் கழகம் இவ்விழாவை ஒழுங்கு செய்திருந்தது. 'பாடசாலை நிர்வாகம் - இலட்சியமும் நடைமுறையும்' என்ற பொருள் பற்றிய தமது உரையில் மேலும் அவர் 'கல்வி என்றால் என்ன? முறையான அடிப்படையான குறிக்கோள் கல்வியின் விளைவு - மாணவர் கற்றல் என்னத்தை - எதை எதைக்கற்க வேண்டும்? - நல்லவர்களாக, முயற்சியுள்ளவர்களாக கடவுளின் விருப்பத்துக்கு நடப்பவர்களாக இய சுபாவத்தை' மாற்றி நல்ல சுபாவத்தை வளர்க்கக் கற்க வேண்டும். மக்களுக்கு நல்ல சேவகனாக வேண்டும்'. என்றார்.

முன்னைநாள் யாழ்இந்து அதிபர் ந. சபாரத்தினம் தமது தலைமை உரையில், 'தனிமனிதத் தொடர்பான எண்ணமும் சிந்தனையும் குறைய வேண்டும். நாட்டு விடுதலை தொடர்பான காலங்களில் தியாகிகளின் நாட்களை நாம் நினைவு கூர வேண்டும். 'சுபாஸ்போஸை நினைவு கூருங்கள்' என்ற காந்தியின் கூற்றை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்" என்றார்.

## இருவர் நிலை கவலைக்கிடம்!

நேற்று முன்தினம் சுன்னாகத்தில் இடம்பெற்ற விமானக் குண்டுவீச்சில் காயமடைந்தோரில் இருவர் ஆபத்தான நிலையிலுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இச் சம்பவத்தில் இ. செல்லையா (65), சந்திராதேவி (82), சி. கந்தசாமி (55), க. மீனலோஜனி (27), ஆ. தம்பிராசா, சாந்தி, சபாநாயகம் ஆகியோர் காயமடைந்திருந்தனர். (ப-2)


### சிறு விளம்பரம்

**சேவை**

புளொக் (Block) புகைப்படம் றபர் சீல் - கலர் படம் - ஓவியம் பிறேம் போடுதல் கலர் பிலிம் சுருள்கள் கிரிக்கேல்முதலியவற்றிற்கு நாடுங்கள்: கொழும்பு ஸ்ருடியோ - யாழ்ப்பாணம் 03015

**புத்தகம்**

இதுதான் முடிவு (சமூக நாடகம்) இலங்கைக் கலைக்கழகப் பரிசு பெற்றது. ஆக்கியோன் நாகலிங்கம் இராசரத்தினம் B.A. விலை ரூபா 25/- விற்பனையாளர்: பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். 03025

**புத்தகம்**

இர. சந்திரசேகரனின் 'வித்தைகள் செய்த விஞ்ஞானிகள்' இரண்டாம் பதிப்பு வெளிவந்துள்ளது ஆசிரியர், மாணவர், விஞ்

### தாதிப் பயிற்சி நெறி

**Diploma in Nursing**

விண்ணப்பத் திகதி 10.03.91 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

1. 1½ வருட காலப் பயிற்சி நெறி.
2. சர்வதேசத் தகைமையுடைய சான்றிதழ்
3. அரசினர் வைத்தியசாலையில் செய்முறைப் பயிற்சிகள்.
4. அரச தொழில் வாய்ப்புக்கு ஏற்புடையது.

விபரங்கட்கு:-

அதிபர்

**சாயி மெடிக்கல் அக்கடமி**

இல. 6, பருத்தித்துறை வீதி,
(முதலாம் ஒழுங்கை, மக் ரவல்ஸ் அருகில்,)


### ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி





## ஞானப்பிரகாசம் தவராஜா (G. T. R.)

அன்னை மடியில்: 07– 01– 1954

ஆண்டவன் மடியில்: 06 – 03– 1985

உன் அன்பான புன்சிரிப்பாலும் பண்பான பேச்சாலும் பணிவான நடத்தையாலும் எம் இதயம் கவர்ந்த அன்பின் தெய்வமே! எங்கு சென்றாய்? போகும்போது மீளமாட்டேன் என ஒரு வார்த்தைதான் சொன்னாயா? கொடியவர்கள் உன்னை பதை பதைக்கக் கொன்றுவிட்டார்களே! காலமெல்லாம் எங்களுக்கு வழிகாட்டியாக இருப்பாய் என இருந்தோம். காலன் உன்னைப் பாதிவயதில் பறித்தானே? நீ சென்றாலும் நீ விட்டுச் சென்ற பாசம் எங்களை விட்டு ஒரு போதும் நீங்காது. உன் ஆத்மா சாந்தியடைய அந்தோனியாரை வேண்டுகின்றோம்.

மனைவி, பிள்ளைகள், தாய், சின்னையா, மாமிமார்,
தம்பிமார், தங்கைமார், மச்சான்மார், மைத்துனிமார்,
இளையய்யா, இளையம்மா, அப்பா,
G. தேவராசா குடும்பத்தினர்.

சப்பரீமடம், பருத்தித்துறை. 03012

---

B. A. விலை ரூபா 25/- விற்பனையாளர்: பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். 03025

### புத்தகம்

இர. சந்திரசேகரனின் 'வித்தைகள் செய்த விஞ்ஞானிகள்' இரண்டாம் பதிப்பு வெளிவந்துள்ளது ஆசிரியர், மாணவர், விஞ்ஞான விஷயங்களில் அக்கறை உள்ளவர்கள் படிக்க வேண்டிய நூல். விலை ரூபா 25/- விற்பனை: பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். 03028

### தேவை

மில்க்வைற் திரவ சவர்க்காரம் வெற்று அரைப் போத்தல் திருப்பித்தந்து போத்தலுக்கு ரூபா 1/- பெறுங்கள். மில்க்வைற் யாழ்ப்பாணம். 03022

### விற்பனைக்கு

பருத்தித்துறை வீதியிலுள்ள கட்டைப்பிராய் பகுதியில் 10 பரப்புக் காணியும், நல்லூர் செல்லர் வீதியில் வீடு கட்டக்கூடிய 4½ பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. லேத் மிசின்கள், தடி வெட்டும் கட்டர் விற்பனைக்குண்டு. தொடர்பு: பரஞ்சோதி தாபனம், முத்திரைச்சந்தை, நல்லூர். 03034

---

2. சர்வதேசத் தகைமையுடைய சான்றிதழ்
3. அரசினர் வைத்தியசாலையில் செய்முறைப் பயிற்சிகள்.
4. அரச தொழில் வாய்ப்புக்கு ஏற்புடையது.

விபரங்கட்கு:-

அதிபர்

## சாயி மெடிக்கல் அக்கடமி

இல. 6, பருத்தித்துறை வீதி,
(முதலாம் ஒழுங்கை, மக் ரவல்ஸ் அருகில்,)
யாழ்நகர். 03037

---

யாழ்ப்பாண மாநகரசபை

## எரிபொருள் விநியோக கூறுவிலை அறிவித்தல்

யாழ்ப்பாண மாநகரசபைக்கு பின்வரும் அளவு எரிபொருள்களைக் கொள்கலனில் விநியோகிப்பதற்கு தகுதிவாய்ந்த விநியோகஸ்தர்களிடமிருந்து 15.3.91-ம் திகதி முற்பகல் 10.00 மணிவரை கூறுவிலைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

01. சாதாரண டீசல் - மாதாந்தம் 420 லீற்றர்
02. மண்ணெண்ணெய்- மாதாந்தம் 50 லீற்றர்

விநியோகிக்கப்படும் எரிபொருளின் தரம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன தரக்கட்டுப்பாட்டுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

மேலதிக விவரங்கள் தேவைப்படின், மாநகரசபை மோட்டார் வாகன தொழில்நுட்ப உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்ளவும்.

வி. பி. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம். 04-03-1991.

03031

# கொழும்பு வைத்தியசாலையில் தீ!

# 8பேர் பலி; பதினேழு பேர் படுகாயம்!!

கொழும்பிலுள்ள மருத்துவமனை ஒன்று நேற்று முன்தினம் இரவு திடீரெனத் தீப்பற்றியதில் எட்டுப்பேர் கொல்லப்பட்டதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன. இச்சம்பவத்தின்போது வைத்தியசாலையில் சிகிச்சைக்கென அனுமதிக்கப்பட்டிருந்த பதினேழு நோயாளர்கள் படுகாயமுற்றனர்.

தீ விபத்துக்குள்ளான வைத்தியசாலை எதுவென்பது பற்றியோ அல்லது இவ் விபத்துக்கான காரணம் என்ன என்பது பற்றியோ உடனடியாக எதுவும் அறிவிக்கப்படவில்லை எனவும் ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

## புத்தவிகாரை மீது பாறை சரிந்தது! மூன்று யாத்திரிகர் ஸ்தலத்தில் பலி!!

இரத்தினபுரி பொலிஸ் பகுதியைச் சேர்ந்த அரங்கொட பொத்வுல விகாரையின் மேலுள்ள பாறை சரிந்து விழுந்ததில் எம்பிலிப்பிட்டியாவில் இருந்து இவ்விகாரைக்கு யாத்திரையாக வந்திருந்த மூவர் கொல்லப்பட்டார்கள்.

இவ் விகாரை சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றெனவும் மேலும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## சுதந்திரக்கட்சித் தமிழ் உறுப்பினர் மீது நீதிமன்றத்தில் கடத்தல் குற்றச்சாட்டு

மாகாண சபை உறுப்பினர் ஒருவரை கடத்தி, அவரிடமிருந்த உடமைகளைத் திருடியதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் மீதும் அவரது ஐந்துசகோதரர்கள் மீதும் குற்றம்சாட்டி நீர்கொழும்பு நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் கம்பஹா மாவட்ட உறுப்பினரான ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயே இக்குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ளார்.

இராசரங்கனை வைச் சேர்ந்த மாகாண சபை உறுப்பினரான சுசுந்தரணசிங்காவை கடத்தி தடுத்து வைத்திருந்து அவரிடமிருந்து அறுபதினாயிரம் ரூபா பணம், வாகனம் என்பவற்றை கொள்ளையடித்ததாகவே நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## பெப்ரவரி மாத வாழ்க்கைச் சுட்டெண்

பெப்ரவரி மாதத்திற்கான வாழ்க்கைச்சுட்டெண் 1083.1 என குடிசனமப்பு புள்ளி விபரப் பகுதி அறிவித்துள்ளது.

## கொழும்பில் பத்து இஸ்ரேலியர்கள்! அபிவிருத்திக்கு உதவவே வந்துள்ளனராம்!!

இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த பத்துப்பேர் தற்பொழுது கொழும்பு வந்துள்ளனர்.

இவர்கள் கொழும்பிலுள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த பத்து இஸ்ரேலியரும் வர்த்தக மற்றும் விவசாயத் துறைகளைச் சேர்ந்தவர்களெனவும் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு உதவும் முகமாகவே இவர்கள் இங்கு வந்துள்ளதாகவும் அரசு தெரிவித்துள்ளது.

## 'அரச பணி' தனியாருக்கும் சேவை! கட்டுப்படுத்த இப்போது நடவடிக்கை!!

'அரச பணி' முத்திரைகளைப் பயன்படுத்தி அதிகளவில் தனிப்பட்ட தபால்களும் இலவசமாக அனுப்பப்பட்டு வருவதாக தபால் பகுதி அறிவித்துள்ளது.

இதனால் 'அரச பணி' தபால்கள் அனுப்பும் விடயத்தில் சில கட்டுப்பாடுகளை ஏற்படுத்துவது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருகின்றதாம்.

தபால்கள்மட்டுமன்றி இந்த இலவச சேவை முத்திரைகளைப் பயன்படுத்தி தற்போது தனியார் பார்ஸல்களும் தபாலில் தாராளமாக அனுப்பி வைக்கப்பட்டு வருவதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாம்.

## கடும் நோயாளர் கொடுப்பனவு

நல்லூர் உதவி அரசஅதிபர் பிரிவைச் சேர்ந்த க்ஷயரோக, புற்றுநோய் உதவிப் பணம் பெறுபவர்கள் சகலரும் 7ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9மணிக்கு திருநெல்வேலியில் அமைந்துள்ள உதவி அரச அதிபர் பணிமனையில் மேற்படி உதவிப்பணத்தைப் பெற்றுக் கொள்ளமுடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## பதவி விலகக் கோரிக்கை

மட்டக்களப்பு மாவட்ட எம்.பி யான எம்.எல்.ஏ.எம், ஹிஸ்புல்லாவை ஏழுதினங்களுக்குள் பதவி விலகுமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் குழு கோரியுள்ளது.

## மண்டைதீவில் புதிய சந்தை

மண்டைதீவுப் பகுதியில் புதிய சந்தை ஒன்றை அமைப்பதற்கான அடிக்கல்லை விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் தீவக அரசியல் பொறுப்பாளர் கரன் அண்மையில் நாட்டிவைத்தார்.

(ப-12)

## அனலைதீவு மக்கள் அகதிகளானதால் அங்கு பயிர்ச்செய்கை பாதிப்பு

அனலைதீவுப் பகுதியில் கடந்த வருடம் ஏற்பட்ட நிலைமைகள் காரணத்தினால் விவசாயிகள் அகதிகளாக சென்றதனால் நெற்செய்கை, மிளகாய்ச் செய்கை, புகையிலை, வெங்காயம் உற்பத்தி என்பன பாரிய அளவில் பாதிப்படைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியிலிருந்து இதற்கு முன்னைய காலங்களில் மிளகாய், வெங்காயம், புகையிலை என்பனவற்றை பெருமளவில் வெளியூர் வியாபாரிகள்கொள்வனவு செய்து வந்தமையும் குறிப்பிடத்தக்கது.

(ப-1)

## உடல்நலத்திற்குத் தீங்கில்லாத புதிய நுளம்புத்திரி உள்ளூரில் அறிமுகம்!

உள்ளூரில் கிடைக்கும் மூலப் பொருள்களைக் கொண்டு விலை குறைவான, உடல்நலத்திற்குத் தீங்கில்லாத நுளம்புத் திரியினை உற்பத்தி செய்யும் முறையொன்றை யாழ் பல்கலைக்கழக விவசாயபீடம் அறிமுகப்படுத்தியுள்ளது.

சாதாரண நுளம்புத் திரிகளில் காணப்படும் உடல் நலத்திற்குத் தீங்கான 'பைரித்திரம்' என்னும் இரசாயனப் பொருள் சேர்க்கப்படாமல் ஆயுர்வேத மூலிகைகளைப் பயன்படுத்தி இந்த நுளம்புத்திரி தயாரிக்கப்படுவதாக விவசாயபீட உயிரியற்றுறைத் தலைவர் கலாநிதி பால சிவகடாட்சம் தெரிவித்தார்.

இவ்வாயுர்வேத மூலிகை நுளம்புத்திரி பரீட்சார்த்த விநியோகம் யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜாவினால் விவசாய பீடத்தில் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

(ப-11)

## மே மாதம் தமிழகத் தேர்தல்! இடைத்தேர்தல் இப்போது இல்லை!!

தமிழக சட்டப் பேரவைக்கான தேர்தல் எதிர்வரும் மே மாதம் நடைபெறும் என இந்தியப்பிரதமர் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

இந்திய நாடாளுமன்றத்திற்கு இடைக்காலத் தேர்தல் ஒன்றை நடத்த வேண்டிய அவசியமோ அல்லது அதற்கான சாத்தியமோ இல்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பூஸாவிலிருந்து இருவர் தப்பினர்

பூஸா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இரு சந்தேக நபர்கள் அங்கி...

# பங்குனி எட்டு மகளிர் எழுச்சிநாள்

அடக்கப்படும் பெண் இனத்தின் உரிமைக்குரலை உயர்த்திச் செல்லும் எழுச்சி மிகு நாளாகப் பங்குனி எட்டாம் திகதி கடந்த எண்பது வருடங்களாக உலகின் பல பாகங்களிலும் கொண்டாடப்பட்டு வருகின்றது. எமது நாட்டில் அண்மைக்காலங்களில் தான் இத்தினத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

அந்த வகையில் காலாதிகாலமாக ஆணாதிக்க சமூகத்தின் அடக்குமுறைக்குள் அகப்பட்டு அல்லலுற்றுக் கொண்டிருப்பது மட்டும் அல்லாது இனவாத அரசின் இரும்புப்பிடிக்குள்ளும் இடர் பட்டு, வதைபட்டுக் கொண்டிருக்கும் தமிழீழப் பெண்களின் எழுச்சியைக் காட்டும் நாளாக எதிர்வரும் பங்குனி எட்டாம் திகதி கொண்டாடப்பட இருக்கிறது.

மூடக் கொள்கைகள் எமது பெண்களை மூச்சுத்திணற வைத்துக்கொண்டிருக்கின்றன. சீதனம் இல்லையென்றால் திருமணத்தைப்பற்றிச் சிந்திக்க வேண்டாமெனச் சபிக்கப்பட்டு சாகும் வரை வேதனையுடன் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றார்கள் எமது பெண்கள். சாதிக்கொடுமையாலும்தான் சாகடிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் இவர்கள். கல்வி பெண்களுக்கு அத்தியாவசியம் என்பதைக் கூட அறிய முடியாத நிலையில் இன்று பல பெண்கள் மூடக் கொள்கைகளாலும், அர்த்தமற்ற மதக் கோட்பாடுகளாலும், வேலைச்சுமைகளாலும் அமுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவற்றால் மட்டுமல்லாமல் இன்னும் பல சமூகக் கொடுமைகளுக்குள்ளாகியும் அல்லாடிக் கொண்டிருக்கின்றார்கள்.

இத்தனையும் போதாது என்று இனவாத அரசின் அடுழியங்களால் அவல வாழ்வு வாழும் பெண்கள் எண்ணிலடங்காதோர். அரச இராணுவத்தால் பாலியல் வன்முறைக்குட்படுத்தப்பட்டு மனம் பாதிக்கப்பட்டு வாழும் பெண்கள் நிலை சொல்லி முடியாது. தென்தமிழீழத்தில் எமது பெண்கள் திசைதெரியாக்காட்டில் மறைந்தேனும் தம்மைக் காப்பாற்றிக் கொள்ளலாம் என்று நினைக்கும் முன்பே இவர்களை இழுத்துச்சென்று தம் காமப்பசியைத் தீர்த்துவிட்டு தடயமின்றியே அழித்துவிடுகின்றார்கள் சிங்கள இராணுவத்தினரும் முஸ்லிம் ஊர்காவல் படையினரும். சிங்கள முஸ்லிம் காடையர்களால் கணவனும், பிள்ளைகளும் சித்திரவதைப் பட்டுக் கொலைப்பட்டதை தம் கண்ணால் கண்டு மனம் பேதலித்துவிட்ட தென்தமிழீழப் பெண்களின் சோகங்கள் சொல்லும் தரமன்று.

இத்தனை கொடுமைகள் மட்டும்தான் எமது தமிழீழத்துப் பெண்கள் அனுபவிப்பவை அல்ல. எண்ணில்லா ஒடுக்குமுறைக்குள் அகப்பட்டு, அலைபட்டு, அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் எமது தமிழ்ப் பெண்கள். பெண்ணினம் எனபதால் மட்டுமல்ல, தமிழினப் பெண்கள் என்பதாலும் இன, சமூக ஒடுக்குமுறை வடிவங்கள் அனைத்தாலும் எமது பெண்கள் தாங்கொணாக் கொடுமைகளைத் தினம்தினம் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

தாயக மீட்புக்காகவும், பெண்ணினத்தின் விடிவிற்காகவும் தமிழீழ விடுதலைப் புலிகள் மகளிர்பிரிவு இணைந்து கொண்டிருக்கும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் இறுதியில் தமிழினத்தைப் பிணித்துள்ள அடிமை விலங்கு மட்டுமல்லாமல் தமிழீழப் பெண்கள் மீது பிரயோகிக்கப்படும் அனைத்து அடக்குமுறைகளும் உடைத்தெறியப்படும்.

- தமிழீழ விடுதலைப் புலிகள்
மகளிர் முன்னணி

## ஜூனுக்குப் பின்னர் வட-கிழக்கில் 7500 பேர் குறித்து தகவல் இல்லை

கடந்த ஜூன் மாதம் இரா ணுவ நடவடிக்கைகள் ஆரம்பித்து எடுத்துச் செல்லப் பட்டுள்ளதாகவும் தகவல்கள்...

சாதாரண நுளம்புத் திரிகளில் காணப்படும் உடல் நலத்திற்குத் தீங்கான 'பைரித்திரம்' என்னும் இரசாயனப் பொருள் சேர்க்கப்படாமல் ஆயுர்வேத மூலிகைகளைப் பயன்படுத்தி இந்த நுளம்புத்திரி தயாரிக்கப்படுவதாக விவசாயபீட உயிரியற்றுறைத் தலைவர் கலாநிதி பால சிவகடாட்சம் தெரிவித்தார்.

இவ்வாயுர்வேத மூலிகை நுளம்புத்திரி பரீட்சார்த்த விநியோகம் யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜாவினால் விவசாய பீடத்தில் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

(ப-11)

## ரஞ்சன் கொலைதொடர்பாக 200பேர்கைது! எனினும் மேலதிக துப்பு எதுவும் இல்லை

அமைச்சர் ரஞ்சன் கொலை தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸ் குழுக்கள் இதுவரை 200 பேரைச்சந்தேகத்தின் பேரில் கைது செய்து காவலில் வைத்துள்ளது.

எனினும் கொலைக்கான சூத்திரதாரி யார் என்பது பற்றி எந்தவித தகவலையும் அவர்களால் இதுவரை பெற முடியவில்லையாம்.

## மூன்றுமாத இலகு கடனில் விவசாயிகளுக்கு விதை தானியம்

நேற்று முன்தினம் கந்தரோடைப் பகுதி விவசாயிகளுக்கு, அவர்களின் பதிவு அட்டைகளுக்கு 3 மாத கடன் அடிப்படையில் ஆளுக்கு அரை அந்தர் உரம் ஒன்றரை லீற்றர் மண்ணெண்ணெய், விதைப் பொருள்களான கௌபி, பயறு என்பன விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரால் வழங்கப்பட்டன.

இப்பகுதியிலுள்ள சனசமூக நிலையமொன்றில் வைத்து இப் பொருள்கள் வழங்கப்பட்டபோது நீண்ட வரிசையில் நின்று விவசாயிகள் அவற்றைப் பெற்றுக் கொண்டனர்.

(ப-10)

## பொத்துவில்-அழிக்கம்பை கிராமத்தில் தமிழ் மக்கள் நடமாட இராணுவம் தடை

கிழக்கில் பொத்துவில் பகுதியிலுள்ள அழிக்கம்பை பகுதியில் தமிழ் மக்கள் நடமாடுவதற்கு இராணுவத்தினர் தடைவிதித்துள்ளனர்.

இப்பகுதியில் வசித்து வந்த வனக்குறவர்கள் வெளியேற்றப்பட்டு தற்போது திருக்கோவில் அகதிமுகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இக்கிராமம் முஸ்லிம் கும்பல் ஒன்றினால் சில மாதங்களுக்கு முன்னர் தாக்கப்பட்டபோது பன்னிரண்டு தமிழர் உயிரிழந்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழக சட்டப் பேரவைக்கான தேர்தல் எதிர்வரும் மே மாதம் நடைபெறும் என இந்தியப்பிரதமர் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

இந்திய நாடாளுமன்றத்திற்கு இடைக்காலத் தேர்தல் ஒன்றை நடத்த வேண்டிய அவசியமோ அல்லது அதற்கான சாத்தியமோ இல்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பூஸாவிலிருந்து இருவர் தப்பினர்

பூஸா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இரு சந்தேக நபர்கள் அங்கிருந்து தப்பி ஓடியுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இவ்விருவரும் ஜே. வி. பி. சந்தேக நபர்களென மேலும் தெரிவிக்கப்படுகின்றது

## மத்திய கல்லூரியில் தமிழ்த் தினம்

யாழ் மத்திய கல்லூரி தமிழ்மன்ற ஆதரவில் தமிழ்த்தின விழா 8 ஆம் திகதி காலை 10 மணிக்கு கல்லூரி தம்பர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் க. சண்முகநாதபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலாநிதி இ. பாலசுந்தரம் கலந்து கொள்ளவுள்ளார்.

## துப்பாக்கிகள் மீட்பு!

திஸ்ஸமஹராமை — கதிர்காமம் பாதையிலுள்ள காட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 23 துப்பாக்கிகள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தத் துப்பாக்கிகள் ஜே. வி. பி. இயக்கத்தினருடையதாக இருக்கலாமென சந்தேகிக்கப் படுகின்றது.

இதேவேளை மாத்தறைப் பகுதியில் உள்ள கைவிடப்பட்ட வீடு ஒன்றில் இருந்து மேலும் எட்டுத் துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக மற்றொரு தகவல் தெரிவிக்கின்றது.

- தமிழீழ விடுதலைப் புலிகள்
மகளிர் முன்னணி

## ஜூனுக்குப் பின்னர் வட-கிழக்கில் 7500 பேர் குறித்து தகவல் இல்லை

கடந்த ஜூன் மாதம் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்டதன் பின்னர் வடக்கு, கிழக்கைச் சேர்ந்த ஏழாயிரத்திஐந்நூறு பேர் பற்றிய தகவல்கள் எதுவும் இடைக்கவில்லை.

மட்டக்களப்பில் 1591 பேரும், அம்பாறையில் 2220 பேரும், திருமலையில் 1500 பேரும், வட மாகாணத்தில் 1500 பேரும் படையினரால் கைது செய்யப்பட்டு தகவல் எதுவும் இல்லாது உள்ளனர்.

பிரஜைகள் குழு, சமாதானக் குழு ஆகியவற்றுக்கு கிடைத்த தகவல்களின் அடிப்படையில் இக் கணிப்பு மேற் கொள்ளப்பட்டதாகவும் இவ் விபரங்கள் மனித உரிமை ஸ்தாபனங்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப் பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பாகிஸ்தான் பிரஜை கொழும்பில் கைது!

15 இலட்சம் ரூபாபோதைப் பொருளுடன் கொழும்பு சர்வதேச விமான நிலையத்தில் பாகிஸ்தான் பிரஜை ஒருவர் சுங்கப் பகுதியினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பம்பாய், கராச்சி வழியாக கொழும்பு வந்த போது அவரது பொதியில் போதைப் பொருள் மறைத்து வைக்கப் பட்டிருந்தமை கண்டுபிடிக்கப் பட்டிருந்தது என அறிவிக்கப் படுகின்றது.

(11)

## கல்லூரி வளவில் நிரைநிரையாக எலும்புக்கூடுகள்!

## பதுங்கு குழி வெட்டும்போது வெளியே வந்தன!!

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி வளவில் இருந்து பல மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. நிரையாக, ஆறு வரிசைகளில் இந்த எலும்புக்கூடுகள் மண்ணுக்குள் காணப்பட்டன.

ஒரு மனித எலும்புக் கூட்டின் வாய்க்குழிப் பகுதியினுள் 1934 ஆம் ஆண்டு பொறிக்கப்பட்ட ஐந்து சத நாணயம் காணப்பட்டது.

இப்பாடசாலை மாணவர்கள் பதுங்கு குழியொன்றை வெட்டியபோதே இந்த எலும்புக் கூடுகள் வெளிவந்தன.

(ப-11)

# அதிசக்தி வாய்ந்த 60 கிலோ குண்டு ரஞ்சனின் உயிர் குடித்தது!

## சீற்றில் இருந்த ஒழுங்கின்படி சடலங்கள் இனம் காணப்பட்டன

அமைச்சர் ரஞ்சனின் கொலை தொடர்பாக விசாரணையை நடாத்தி வரும் அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களம் இம்முயற்சியில் பயன் படுத்தப்பட்ட வெடி குண்டு குறித்த எவ்வித முடிவுக்கும் இன்னும் வரவில்லை என அறிவிக்கப்படுகிறது.

"சி 4 ரக பிளாஸ்ரிக் குண்டு ஒன்று பயன்படுத்தப்பட்டதாக ஊகங்கள் தெரிவிக்கப்பட்ட போதும், இது பற்றி நிச்சயமாக ஒன்றும் சொல்வதற்கு இல்லை"

இதைவுகளுக்கு இடையில் ஜப்பானிய, ஜேர்மனிய தயாரிப்புகளின் பகுதிகள் அகப்பட்டதாகவும், அவற்றை தொகுத்துக் கொண்டிருப்பதாகவும் இத் திணைக்கள அதிகாரி ஒருவர் சொன்னார்.

அமைச்சர் ரஞ்சன் பயணம் செய்த சொகுசுக்காரின் பென்ஸ் இலச்சினை 200 யாருக்கு அப்பால் உள்ள ஒளாஸன் பிளேஸில் கண்டெடுக்கப்பட்டது.

கொழும்பில் முன்னர் பயன்படுத்தப்பட்ட வெடி குண்டுகளை விட இது சக்தி வாய்ந்தது எனவும் புறக்கோட்டையில் 35 கிலோ குண்டும், மருதானையில் 40 கிலோ குண்டும் முன்னர் பயன்படுத்தப் பட்டனவென்றும், இக்குண்டோ 60 கிலோ எடையுள்ளதென அனுமானிக்கலாம் எனவும் அதிகாரி சொன்னார்.

குண்டு வெடிப்பில் சிக்கிய சொகுசுக்காரும், அதனுள் கருகிய நிலையில் இருந்த உடல்களோடு ஒரு இறந்த ட்ரக் வண்டியில் அப்படியே தூக்கி ஏற்றப்பட்டு சமீட வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு கொண்டு செல்லப்பட்டதாம்.

காரில் அமைச்சரும் பாதுகாப்பு அதிகாரிகளும் அமர்ந்திருந்த ஒழுங்கின் அடிப்படையிலேயே கருகிய உடல்கள் அடையாளம் காணப்பட்டனவாம்.

'பென்ஸ்' காரும், அதற்குப் பாதுகாப்பாக வந்த 'வாண்ட் றோவரையும்' தவிர ஒருபஸ், எட்டுக்கார்கள் பத்துக்கும் அதிகமான மோட்டார் சைக்கிள்கள் முற்றாகச் சேதமடைந்திருந்தன.

குண்டுவெடிப்பில் இறந்தவர்கள் 19 பேர் காயமடைந்தவர்கள் 59 பேர். ஆனால் அரசாங்க அறிக்கை ஒன்றின்படி 24 அப்பாவிப் பொது மக்கள் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## ஆயுதக்கொள்வனவில் ரஞ்சன் தரகுப்பணம் பெற்றாரா?

தென் கிழக்கு ஆசிய நாடு ஒன்றிலிருந்து இலங்கை அரசின் ஆயுதக் கொள்வனவு தொடர்பாக மறைந்த அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன பெருமளவு தரகுப் பணம் பெற்றதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதனால் அமைச்சரின் கொலையில் தனிப்பட்ட குரோதங்களும் இருக்கலாம் என சந்தேகிக்கப் படுவதாக தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை கொழும்பில் இருந்து வெளிவரும் சில பத்திரிகைகள் ரஞ்சன் விஜேரட்னவின் கொலையில் அரசின் பின்னணி இருப்பதாக சூசகமாக செய்தி வெளியிட்டுள்ளன. (70)

## அமெரிக்க ஆதரவு புரட்சிக் குழு ஈராக்கியப் படையால் முறியடிப்பு

ஈராக்கின் தென்பகுதி நகரான பஸ்ராவில் கடந்த மூன்று நாட்களாக நடைபெற்று வந்த அமெரிக்க சார்பு புரட்சி கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தீவிரவாத முஸ்லிம் அமைப்பு கடந்த மூன்று தினங்களாக பஸ்ராவை தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தது. இதற்கு அமெரிக்கப்படைகளின் உதவியும் கிடைத்திருந்தது.

நேற்று அதிகாலையில் பஸ்ராவினுள் புகுந்த ஈராக்கின் குடியரசுக் காவல் படை எனும் கவச வாகன அணி புரட்சியாளரைக் கைது செய்ததுடன் பஸ்ரா நகரை மீண்டும் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தது. நகரினுள் புகுந்த டாங்கிப் படை இயந்திரத் துப்பாக்கிகள் கொண்டு பரவலாகத் தாக்குதல் நடாத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பஸ்ராவை தவிர்ந்த ஏனைய ஐந்து நகர்களுக்கும் கவசப் படைகள் விரைந்துள்ளன. புதிய முஸ்லிம் புரட்சி அமைப்புக்கு ஆயுத விநியோகம் இல்லாமையினால் அவர்கள் ஈராக்கியப் படைகளினால் தோற்கடிக்கப்பட்டு வருகின்றனர். இதேவேளை பஸ்ராவில் உள்ள புரட்சிக் குழுவின் நடவடிக்கைகள் குறித்து செய்தி சேகரிக்கச் சென்ற ஒரு தொகுதி வெளிநாட்டுச் செய்தியாளர்கள் காணாமற் போய்விட்டனர். அவர்கள் ஈராக்கின் குடியரசு காவற் படையால் கைது செய்யப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

## வட கிழக்கு அரச ஊழியருக்கு ஜூன் 12 - செப் 1 வரை விடுமுறை

வடக்கு கிழக்கு மாகாணங்களில் பணிபுரியும் அரசாங்க ஊழியருக்கு அப்பகுதி சூழ்நிலையை கருத்தில்கொண்டு விசேட விடுமுறை வழங்குமாறு பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு சுற்றுநிருபம் மூலம் அறிவித்துள்ளது.

இச்சுற்று நிருபப்படி 12-06-1990 முதல் 1-9-1990 வரையும் இவர்களுக்கு விடுமுறை வழங்கப்படலாம்.

வேலையில் இருந்து நீங்கிச் சென்ற உத்தியோகத்தர் ஒருவர் மீண்டும் வேலைபெற விண்ணப்பித்தால் வடக்கு கிழக்குப் பொறுத்தவரை ஆளுநரும், மத்திய அரசு சம்பந்தப்பட்டது எனின் மாவட்ட அரசாங்க அதிபர்களும் அது பற்றி மீளாய்வு செய்யலாம்.

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வெளியில் தொழில் புரியும் இப்பகுதியைச்சேர்ந்தவர்கள் விடுமுறையில் ஊர் சென்று திரும்பி வர முடியாவிடில் அது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீளாய்வு செய்யலாம்.

## பெற்றோர் இறந்த செய்தியை கேட்டு மகள் மயக்கமடைந்தார்

நேற்று முன்தினம் சுன்னாகத்தில் நடைபெற்ற விமானத் தாக்குதலில் தனது தாயும், தந்தையும் இறந்த செய்தியை 'புலிகளின் குரலில்' கேட்டு அச்சம்பவத்தில் உயிர் தப்பிய மகள் மயக்கமடைந்த சம்பவம் நேற்று இரவு யாழ் ஆஸ்பத்திரியில் இடம்பெற்றது.

எஸ். சுகந்தினி (20) என்ற இளம் பெண் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்தார். நேற்றிரவு புலிகளின் குரல் செய்தியறிக்கையில் தனது தாயும், தந்தையும் கொல்லப்பட்ட செய்தியைக் கேட்டதும் அழுது புலம்பியவாறு மயக்கமடைந்தார். (70)

## விமானத்தாக்குதல்களால் பாடசாலைகள் மூடப்பட்டன

நேற்றும் இரண்டாவது தடவையாக யாழ் நகரை அண்டிய பகுதிகளில் குண்டு வீச்சு விமானங்கள் தாக்குதலை மேற்கொண்டதால் பாடசாலைகள், திணைக்களங்கள், கூட்டுறவு தாபனங்கள் என்பன முழுமையாக இயங்க முடியாது உள்ளதாகத் தெரியவருகிறது;

நேற்றும், நேற்றுமுன்தினமும் யாழ் நகரப் பாடசாலைகளில் சில 10 மணியுடன் மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ப.11)

### யாழ் செயலக அறிவிப்பு

## உலர் உணவு அட்டைகள் மீள் பரிசீலனை செய்யப்படும்

இடம்பெயர்ந்தோர் தொழில் இழந்தோர் ஆகியோர்களுக்கு யாழ் செயலகத்தினால் வழங்கப்பட்ட உலர் உணவு விநியோக அட்டைகள் மீள் பரிசீலனை செய்யப்படவுள்ளன.

வேலணை, யாழ்ப்பாணம் போன்ற உதவி அரச அதிபர் பிரிவுகளில் இருந்து ஏனைய இடங்களுக்கு இடம்பெயர்ந்து சென்ற பலர் தற்போது தமது சொந்த இடங்களுக்குத் திரும்பியுள்ளனர்.

வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களில் பலர் தமது சொந்த மாவட்டங்களுக்குத் திரும்பியுள்ளனர். கிராம சேவையாளர்கள் இவற்றைக் கவனத்தில் எடுத்து அவ்வாறானவர்களுக்கு "இ" அட்டைகளுக்குப் பதிலாக "அ" அட்டைகளை வழங்குமாறு செயலக செயற்திட்டப் பணிப்பாளர் எஸ். பத்மநாதன் சுற்றுநிருபம் மூலம் பணிப்புரை வழங்கியுள்ளார்.

இதேவேளை தொழில் இழந்தவர்களில் பலர் மீண்டும் தொழில் முயற்சியை ஆரம்பித்திருப்பதாலும் இவ்வாறானவர்களின் உண்மை நிலையை கிராமசேவை அலுவலர்கள் மதிப்பீடு செய்து அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும் எனவும் அவர் மேலும் கேட்டுள்ளார். (66, 33)

## மானிப்பாய் இலங்கை வங்கியில் 4000 ரூபா கொடுப்பனவு

மானிப்பாய் இலங்கை வங்கி கிளையில் 9 ஆம் திகதி சனிக்கிழமை 4000 ரூபா நிவாரணம் வழங்கப்படவுள்ள ...

... கிராமசேவையாளர் பிரிவுகளுக்கு இந்தக் கொடுப்பனவு இடம்பெறும் என மாவட்ட முகாமையாளர் அறிவித்துள் ...

ராஜீவை ...

இச்சம்பவம் குறித்து தெரிவித்த பிரதமர் சந்திரசேகர் உளவு பார்த்த விடயம் மிகவும் பாரதூரமானது எனவும் இதற்கும் மத்திய அரசுக்கும் தொடர்பு இல்லை எனவும் கூறினார்.

பீஹார் பொலிஸைச் சேர்ந்த இரு இன்ஸ்பெக்டர்கள் ராஜீவ் காந்தியை இரகசியமாக உளவு பார்த்ததாகவும் இது தொடர்பாக பீஹார் பொலிஸ் அதிகாரியை ...

கரவெட்டி...

### நீர்வேலி ப. நோ. கூ. சங்கத்தில்

## 4-ம் கட்ட பருப்பு விநியோகம் சம்பந்தப்பட்டவர்கள் விளக்கம்

"நீர்வேலி பல நோ. கூ. சங்கத்தில் 4-ம் வார உணவு விநியோகம் 28.01 91-ல் ஆரம்பிக்கப்பட்டபோது 1602 கிலோ பருப்பு மட்டுமே கையிருப்பில் இருந்தது. இதனை இடம்பெயர்ந்தோர்களுக்குமட்டுமே வழங்க முடிந்தது.

4-ம் வார விநியோக முடிவில் 4997 கிலோ பருப்பு எமக்கு வழங்கப்பட்டபோதும் இது எமது விநியோகத்திற்குப் போதுமானதாக இருக்கவில்லை.

22 01. 91-ல் 4580கிலோ பருப்புபெறப்பட்டு25 2.91-ல் அடுத்த விநியோகம் ஆரம்பிக்கப்பட்டது.

மீண்டும் நாம் பருப்பைப் பெற முயற்சிசெய்த போது ... 7000கிலோ ...

புனர்வாழ்வு புனரமைப்பு செயற்திட்ட பணிப்பாளர் தகவல் தருகையில் 31. 12 90-ல் இச்சங்கத்திடம் 18961 கிலோ பருப்பு கையிருப்பு இருந்ததை அவர்களது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்பின்னர் 28 01 91-ல் 5000கிலோ பருப்பு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. இச்சங்கத்திற்கு ஒரு விநியோகத்திற்கு 8610 கிலோ பருப்பு தேவை எனக் கணக்கிடப்பட்டுள்ளது. எனவே பற்றாக்குறை ஏற்படவேண்டிய அவசியம் இருந்ததாகத் தமக்குத் தெரியவில்லை எனவும் தெரிவித்தார். (66)

## எதிர்க்கட்சிகள்

சனிக்கிழமை 4000 ரூபா நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

சங்கானை வடக்கு, நவாலி பண்டத்தரிப்பு மாகியம்பிட்டி, மாதகல், மானிப்பாய், பெரிய விளான், சுதுமலை ஆகிய

## 1990-91கல்வி...

மேலும் குறைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பீடத்திலும் 30வீதம் மேலதிகமான மாணவர்களுக்கு இடம் ஒதுக்கப்படவுள்ளது.

இதனால் கூடுதலான மாணவர்கள் இவ் அரிய வாய்ப்பைப் பெறும் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன

இதனாலேயே 1990 - 91 கல்வியாண்டுக்கு புதிய மாணவர்களை அனுமதிப்பது தொடர்பாக காலதாமதம் ஏற்பட்டுவருகிறதாகத் தெரிவிக்கப்படுகிறது.

1990 - 91 கல்வியாண்டு மாணவர்களுக்கு ஏப்பிரல் மாதகாலப்பகுதியில் 'கெல்த்' (Gelt) ஆங்கிலவகுப்பு ஆரம்பமாகும் எனவும், இவ்வருட நவம்பர் மாதப் பகுதிகளில் புதிய மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்புண்டு எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ப11)

இடம்பெறும் என மாவட்ட முகாமையாளர் அறிவித்துள்ளார்.

## கொழும்பு—

அடங்குவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு முதல் நாள் கைது செய்யப்பட்டோரில் இவர் மறுநாள் காலை விசாரணை ஏதுமின்றி விடுதலை செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## சர்வகட்சி...

தீர்வுக்கு தாம் தனிப்பட்ட பிரேரணை ஒன்றை விரைவில் சர்வகட்சி மாநாட்டில் சமர்ப்பிக்கப் போவதாக அறிவித்துள்ளது

கடந்த மாதம் 16ஆம் திகதி நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டில் ஈ. பி. ஆர். எல். எப் ஒப்பமிட மறுத்துள்ளது.

இத தமிழர் கட்சிகள் வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம் சிறுபான்மையினரின் நியாயமான உரிமைகளை அங்கீகரிக்காமல் உதாசீனம் செய்கின்றன.

எனவே முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி தமிழர் கட்சிகளுடனான பேச்சுக்களில் இருந்து விலகிக்கொள்கிறது.

## கரவெட்டி...

குண்டு வீச்சினால் பதுங்கு குழி மீது சுற்று மதில் விழுந்த போதிலும் பதுங்கு குழி சேதமடையவில்லை. (50)

## மன்னாரில்—

குண்டு வீச்சுத் தாக்குதலை நடாத்தின.

இத் தாக்குதலின் போது பல பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை மன்னார் தள்ளாடி முகாமிலிருந்தும் குடிமனைகளை நோக்கிக் கடுமையான ஆட்லறி ஷெல் தாக்குதலும் மேற்கொள்ளப்படுகிறது. (70)

## ஊர்காவற்றுறையில்..

சென்றனர்.

இதன்பின்னர் ஊர்காவற்துறை முகாமில் இருந்து ட்ரக் வண்டிகள் மூலம் இராணுவத்தினர் மேற்படி காவலரண்களுக்கு வந்தனர்.

தொடர்ந்து இராணுவத்தினர் சின்ன மூளாய் நோக்கி கடும் ஷெல் தாக்குதலை நடாத்தினர் இதில் சில கால்நடைகள் பலியாகின. (71)

இது தொடர்பாக பீஹார் பொலிஸ் அதிகாரியை விசாரணை செய்தபோது அந்த இரு பொலிஸ் இன்ஸ்பெக்டர்களும் சம்பவதினங்க விக்லீவில்சென்றதாகவும்பதில் தரப்பட்டது எனவும் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

## நிவாரண...

இக்கணக்கு விவரங்கள் உடனுக்கு உடன் செயலகத்துக்கு அறிவித்தாலே அடுத்த விநியோகத்துக்கான பொருள்களை வழங்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார். (66)

## ஓட்டுமடம்...

மகாதேவா என்பவரின் வண்டில் மாடுகளும் கொல்லப்பட்டன. இரு வீடுகள் சேதத்திற்குள்ளாயின (ப.10)

## பொதுமக்கள்—

வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை விமானப் படையின் அண்மைய தாக்குதலில் அதிக பாடசாலைகள் சேதமடைந்தது தொடர்பாகவும் தலைமையகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (70)

பெற முயற்சிசெய்த போது அதற்குப் பதிலாக 7000கிலோ பயறு மட்டும் கிடைத்தது. இவ்வாறு இச்சங்கப் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி யாழ் செயலக

## கிளிநொச்சி—

பவளம் (63), அ. நிமலன் (08), அ. சந்திரமோகன்(12) ஆகியோர் காயமடைந்தனர்.

இக் குண்டு வீச்சில் சில கால் நடைகளும் கொல்லப்பட்டன. (35, 70)

## தமிழ்...

விமான குண்டு வீச்சு நிறுத்தப்படவேண்டும். இப்பொழுது நடைபெறுவது தமிழ்மக்களுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையே'' என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

12 கட்சி கூட்டணிக்குத் தலைமை வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இவ்வறிக்கை குறித்து கவலையடைந்துள்ளதாம்.

## எதிர்க்கட்சிகள் ஆராய்வு

பாராளுமன்றத்தில் கடந்த மாதம் இடம்பெற்ற அமளி துமளி குறித்து எதிர்க்கட்சி பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இக்குழுக் கூட்டத்தில் சபாநாயகருடன் அண்மையில சந்தித்துப்பேசியமை குறித்தும் ஆராயப்பட்டது.

## மடு...

ஆகிய இடங்களைச் சேர்ந்த 18,000 தமிழ் அகதிகள் மீளவும் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு தேவையான உணவு மற்றும் சுகாதாரவசதிகளை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகராலயம் வழங்கிவருகிறதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப-11)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு 'டச்சு வீதி, லக்ஷ்மிபில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 06 - 03 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.